**கவனிக்க.**- *2021.07.16 ஆந் திகதிய 2237 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2238 - 2021 ජූලි මස 22 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.07.22

*2238 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 900 | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | | | |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | | |



**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2021, ஓகத்து மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, யூலை மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*



899 - B82252 - 5403 (2021/07)

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 9(1) ஆவது பிரிவின் கீழான அறிவித்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 (1) ஆவது பிரிவின் கீழ் மத்திய மாகாணத்தின் கண்டி மாவத்தில் ஹாரிஸ்பத்துவ பிரதேச சபைக்குள் அமைந்துள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைகள் ஹாரிஸ்பத்து பிரதேச சபைக்குச் சொந்தமான பாதையென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இப் பிரதேசத்தின் பொது மக்கள் அல்லது பாதையுடன் சம்பந்தப்படும் காணி உரிமையாளர்கள் எவரும் இருப்பின், தமது உரித்துரிமையை அல்லது எதிர்ப்பைக் காட்ட வேண்டுமெனின், இந்த வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட ஒரு மாத காலத்துக்குள் தமது உரித்துரிமையை நிரூபிப்பதற்கென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 (2) ஆவது பிரிவின்படி செயற்படுமாறு அறிவிக்கப்படுகின்றது.*

*இந்தக் கால எல்லைக்குள் எதிர்ப்புக்கள் எதுவும் முன்வைக்கப்படவில்லை எனின், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 (3) ஆவது பிரிவின் கீழ், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைகள் ஹாரிஸ்பத்துவ பிரதேச சபைக்கு உரித்தான பாதையாகக் கொள்ளப்பட்டு நிரந்தரமாகப் பராமரிக்கப்பட்டு வரும் என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*எச். ஏ. ஆனந்த ஜயவிலால்,*
*தவிசாளர்,*
*ஹாரிஸ்பத்துவை பிரதேச சபை,*
*ஹாரிஸ்பத்துவை.*

*ஹாரிஸ்பத்துவை பிரதேச சபை அலுவலகம்,*
*ஹாரிஸ்பத்துவை,*
*2021, மாச்சு 24.*

### அட்டவணை

*01. பாதையின் பெயர்* : ஹல்ஒலுவ பெனசர மாவத்தை
*02. ஆரம்பம்* : ஹல்ஒலுவ கெற்றம்பே பிரதான பாதை
*03. முடிவு* : யோர்க் ஹோட்டல் பாலம்

| | | |
|---|---|---|
| *இடதுபுறம் :* | *01. டீ. ஜீ. ஜயசேகர* | இல. *157/2*, ஹல்ஒலுவ |
| | *02. பீ. எஸ். கே. ராஜபக்ஸ* | இல. *161/1/11*, கந்தொட்டதென்ன |
| | *03. எம். என். ஏ. ஜயவர்தன* | இல. *160/1/*A, ஹல்ஒலுவ |
| | *04. ரீ. டீ. ஜகத்காந்த* | இல. *162/1/*C, ஹல்ஒலுவ |
| | *05. ஆர். போவத்த* | இல. *162/1/1*, ஹல்ஒலுவ |
| *வலதுபுறம் :* | *01. இந்திராணி விஜேரத்ன* | இல. *174/*B, ஹல்ஒலுவ |
| | *02. சத்துர மதுஷான்* | இல. *21/4*, கங்தொட்டதன்ன, ஹல்ஒலுவ |
| | *03. டீ. ஏ. ஏ. கருணாரத்ன* | இல. *160/1/*C, கங்தொட்டதன்ன |
| | *04. டீ. ஜீ. நாமல் ராஜபக்ஸ* | இல. *162*, கங்தொட்டதன்ன, ஹல்ஒலுவ |
| | *05. எம். ஜீ. சீ. மல்வத்த* | இல. *162/1/*B, கங்தொட்டதன்ன |
| | *06. பீ. ஜீ. ஜேமிஸ்* | இல. *160/1/*B, கங்தொட்டதன்ன |
| | *07. ஜீ. பீ.ஜீ. எஸ். குணரத்ன* | இல. *162/3*, கங்தொட்டதன்ன |
| | *08. சம்பிகா பிரியதர்ஷனி* | இல. *162/2/* கங்தொட்டதன்ன, ஹல்ஒலுவ |
| | *09. தர்மரத்ன* | இல. *160/1/*C, கங்தொட்டதன்ன |
| | *10. கே. விஜேரத்ன* | இல. *160/1/*A, கங்தொட்டதன்ன |
| | *11. இஷானி சிறிவர்தன* | இல. *162/6*, கங்தொட்டதன்ன |

| | |
|---|---|
| பாதையின் நீளம் | : 96 மீற்றர் |
| பாதையின் அகலம் | : 20 அடி |
| திட்ட வரைவு | : நில அளவையாளர் திரு. ஏ. எம். திலக்கரத்ன என்பவரால் அளவீடு செய்து 1971 இல் இலக்கம் இடப்பட்டது. |

07-498

---

**அளவ்வ பிரதேச சபை**

விநோத வரி கட்டளைச் சட்டம்

(267 ஆம் அதிகாரம்) விநோத வரி கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவினால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி அளவ்வ பிரதேச சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணை உரிய பிரிவில் 2 ஆம் உப பிரிவினால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி வடமேல் மாகாணத்தில் வடமேல் உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்ற உரிய பிரிவின் படி இத்துடன் பிரசுரிக்கப்படுகின்றது.

உயர் சட்டத்தரணி ராஜா கொல்லுரே,
வடமேல் மாகாண கௌரவ ஆளுநர்.

ஆளுநர் பணிமனை,
மாலிகாவ,
குருநாகல்.

**தீர்மானம்**

(267 ஆம் அதிகாரம்) விநோத வரி கட்டளைச் சட்டத்தின் இரண்டாம் பிரிவில் 1 ஆம் உப பிரிவினால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி அளவ்வ பிரதேச சபையின் நிருவாக எல்லையினுள் உள்ள பிரதேசத்தில் கொண்டு நடாத்தப்படுகின்ற உரிய கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ள ஏதாவதொரு விநோத நடவடிக்கைக்கு உள்வாக்குவதற்காக செலுத்தப்படும் கொடுப்பனவில் (விநோத வரி தவிர) நூற்றுக்கு பத்திற்கு (10%) சமமான வரியினை விதித்து அறவிடப்பட வேண்டும் என்றும், இப் பிரேரணை ஏற்றுக் கொள்ளப்பட்ட வர்த்தமான பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட்ட திகதியில் இருந்து ஒரு மாதம் கழிந்து அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று பிரேரணை விடுக்கப்படுகின்றது.

07-504

---

திருத்தம்

**குருநாகல் பிரதேச சபை**

2020.12.24 ஆந் திகதி வெளியிடப்பட்ட இலக்க 2, 208 ஆம் இலக்க வர்த்தமானியில் 12-567/10 ஆம் இலக்க அறிவித்தல் பின்வரும் விதத்தில் திருத்தப்பட வேண்டும்.

**குருநாகல் பிரதேச சபை**

2021 ஆம் வருடத்திற்காக வழங்கப்படுகின்ற சேவைகள் மற்றும் சொத்துக்கள்
வாடகைக்கு வழங்கல் தொடர்பான கட்டண அறவீடு

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 2021 ஆம் வருடத்திற்கான வழங்கப்படுகின்ற சேவைகள் மற்றும் சொத்துக்கள் வாடகைக்கு வழங்கல் தொடர்பான கட்டண அறவீடு பின்வரும் விதத்தில் திருத்தப்பட வேண்டும் என்பதனை

2020 ஆம் வருடத்தில் திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி நடாத்தப்பட்ட குருநாகல் பிரதேச சபைக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 08 இன் கீழ் பின்வரும் ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பதனை இத்தால் அறியத் தருகின்றேன்.

ஆர். பீ. ஆசல நிமந்த விக்கிரமதிலக,
தவிசாளர்,
குருநாகல் பிரதேச சபை.

குருநாகல் பிரதேச சபை,
2020, திசெம்பர் 28.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் கீழ் குருநாகல் பிரதேச சபைக்கு கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப குருநாகல் பிரதேச சபையினால் வழங்கப்படுகின்ற சேவைகள் தொடர்பாக உப அறிக்கை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டண அறவீடு 2021 ஆம் வருடத்தில் பின்வருமாறு திருத்தப்பட வேண்டும் என்பதனை குருநாகல் பிரதே சபை தீர்மானித்துள்ளது.

**உப அறிக்கை 2**

| தொடர் இலக்கம் | விளக்கம் | செலுத்த வேண்டிய கட்டணம் ரூபா ச. |
|---|---|---|
| 15 | கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்பு கட்டிடம் ஒன்று தொடர்பான திட்டம் ஒன்றிற்கான அனுமதி பெற்றுக் கொள்வது தொடர்பான தண்டப் பண அறவீடு திட்டத்திற்கு ஏற்ப அனைத்து வேலைகளும் முடிந்திருந்தால் | |
| | சதுர அடி 0-1000 வரை | 2000.00 |
| | கதுர அடி 1001-2000 வரை | 5000.00 |
| | சதுர அடி 2001-3000 வரை | 10,000.00 |
| | சதுர அடி 3001 இற்கு மேல் | 15,000.00 |
| 16 | கட்டி முடிக்கப்பட்ட வியாபார கட்டிடம் ஒன்று தொடர்பான திட்டம் ஒன்றிற்கான அனுமதி பெற்றுக் கொள்வது தொடர்பான தண்டப் பண அறவீடு | |
| | திட்டத்திற்கு ஏற்ப அனைத்து வேலைகளும் முடிந்திருந்தால் | |
| | சதுர அடி 0-1000 வரை | 10,000.00 |
| | கதுர அடி 1001-2000 வரை | 20,000.00 |
| | சதுர அடி 2001-3000 வரை | 30,000.00 |
| | சதுர அடி 3001 இற்கு மேல் | 50,000.00 |

குருநாகல் பிரதேச சபை எல்லைக்குள் 2015.08.04 ஆந் திகதிக்கு முன்னர் கட்டி முடிக்கப்பட்ட அனைத்து கட்டிடங்கள் தொடர்பாகவும் பிரதேச சபையின் அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு அனுமதியை பெறாத 2015.08.04 ஆந் திகதிக்கு முன்னர் கட்டப்பட்ட அனைத்து கட்டுமானங்கள் தொடர்பாகவும் 2021 ஆம் வருடத்தில் அனுமதிக்காக முன்வைக்கும் போது மேல் குறிப்பிட்டுள்ள தண்டப் பணம் அறவிடப்படும். அதே போல் 2015.08.04 ஆந் திகதிக்கு பின்னர் கட்டப்பட்ட அனைத்து கட்டுமானங்கள் தொடர்பாகவும் நகர அபிவிருத்தி ஆணையகம் மூலம் திணிக்கப்படுகின்ற சேவைக் கட்டணம் பொருந்தும் என்பதனை கருத்திற் கொள்ளவும்.

07-670/1

---

திருத்தம்

**குருநாகல் பிரதேச சபை**

2020.12.24 ஆந் திகதி வெளியிடப்பட்ட 2, 208 ஆம் இலக்க வர்த்தமானி அறிக்கையில் 12-567/10 ஆம் அறிவித்தல் பின்வரும் விதத்தில் திருத்தப்பட வேண்டும்.

## குருநாகல் பிரதேச சபை

*2021 ஆம் வருடத்திற்காக வழங்கப்படுகின்ற சேவைகள் மற்றும் சொத்துக்கள் வாடகைக்கு வழங்கல் தொடர்பான கட்டண அறவீடு*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 2021 ஆம் வருடத்திற்கான வழங்கப்படுகின்ற சேவைகள் மற்றும் சொத்துக்கள் வாடகைக்கு வழங்கல் தொடர்பான கட்டண அறவீடு பின்வரும் விதத்தில் திருத்தப்பட வேண்டும் என்பதனை 2021 ஆம் வருடத்தில் பெப்புருவரி மாதம் 16 ஆந் திகதி நடாத்தப்பட்ட குருநாகல் பிரதேச சபைக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 20 இன் கீழ் பின்வரும் ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பதனை இத்தால் அறியத் தருகின்றேன்.*

ஆர். பீ. ஆசல நிமந்த விக்கிரமதிலக,
தவிசாளர்,
குருநாகல் பிரதேச சபை.

குருநாகல்,
பிரதேச சபை அலுவலகம்,
2021, பெப்புருவரி 16.

### தீர்மானம்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் கீழ் குருநாகல் பிரதேச சபைக்கு கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப குருநாகல் பிரதேச சபையினால் வழங்கப்படுகின்ற சேவைகள் தொடர்பாக உப அறிக்கை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டண அறவீடு 2021 ஆம் வருடத்தில் பின்வருமாறு திருத்தப்பட வேண்டும் என்பதனை குருநாகல் பிரதே சபை தீர்மானித்துள்ளது.*

### உப அறிக்கை 2

| தொடர் இலக்கம் | விளக்கம் | செலுத்த வேண்டிய கட்டணம் ரூபா ச. |
|---|---|---|
| 02 | ஆபத்தான மரங்களை அகற்றவதற்கான விண்ணப்பப் படிவங்களுக்கான கட்டணம் மற்றும் சோதனைக் கட்டணம் | 500.00 |

07-670/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.